தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 142

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்:
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரு. 24—0—0
6 மாதம் ரு. 12—0—0
3 மாதம் ரு. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரு. 30—0—0
6 மாதம் ரு. 15—0—0
3 மாதம் ரு. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை: கார்த்திகை 11உ வியாழன் (26—11—53) ★ ★ ★ வெளியீடு: கார்த்திகை 12உ வெள்ளி (27—11—53)

'விடுதலை எப்போது என நினைத்தேன்! இன்றோ திராவிடத்தின் விடுதலை எப்போது என்கிறது உள்ளம்!'

"நண்பர்கள் குந்தினபடியே உறங்கினர்! நான் நின்றபடியே உறங்கினேன்!"

திருச்சி, நவ. 21—

"நேற்று இங்கேரம் இரவு, சிறைக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, விடுதலை எப்போது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது திராவிடத்தின் விடுதலை எப்போதென என் உள்ளம் கேட்கிறது. இன்று எனக்கு ஏற்பட்ட உணர்ச்சி, 'மகிழாதே நீ நடந்து வந்த பாதையைப் பார்; அதிலே உள்ள குறைகளைப் பார்,' என்று, இடித்துச் சொல்கிறது."

"கோலைக்களம் என்று கேள்விப்பட்டிருக்கிறோமே, அதைவிடக் கொடுமையான இடத்தில்—அந்த அற்புதமான ஜெயிலில், 20 பேர் இருக்கவேண்டிய இடத்தில் 64 பேர் இருந்தோம்; நண்பர்கள், உட்கார்ந்தபடியே தூங்கினர்—நான் சிறைக் கம்பிகளைப் பிடித்து நின்றபடியே தூங்கினேன். இன்று விடுதலை செய்யப்பட்டோம்"

"இந்த நாட்டில் ஜனநாயகம் என்ன ஆயிற்று? இங்கே ஜனநாயகம் என்ற சிசு துடிக்கத் துடிக்க வெட்டப்படுகிறது. வெள்ளாடுகளைக் கொன்ற வேங்கை, ரத்த நாக்குடன், வேதாந்தம் பேசுவது எப்படியோ—அதுபோலத்தான் காங்கிரஸ் தலைவர் ஆச்சாரியார் ஜனநாயகம் பற்றிப் பேசுவது. அவர்கையிலே இருப்பது 'கோலேவாள்.' அதனால்தான் அவர் நம்மீது பாய்கிறார்."

—இவ்வாறு, 21-ந் தேதி மாலை திருச்சி, புத்தூர் சின்ன மைதானத்தில், தன்னை வரவேற்கக் கூடியிருந்த லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்முன் தோழர் கருணாநிதி முழங்கினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"தோழர்களே! காலையில், சிறைவாயிலிலிருந்து நடந்த ஊர்வலமும், இந்தப் பொதுக் கூட்டத்தில் தந்த வரவேற்பும், என்னை, 'இன்னும் தொண்டு செய்யப் போ,' என்று கூறுகிறது.

நான் கடைசியாக உங்களை சென்ற ஜூலை மாதம் 15ந் தேதி காலை சந்தித்து விடைபெற்றுக் கொண்டேன். திரும்பி நான் இன்று வெளியே வரும்போதும் அதே சர்க்கார்தான் இருக்கிறது. இந்த ஐந்து மாதகாலமாக இந்த நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பையும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அடைந்த அபாரத்தையும், இங்கே ஏற்பட்ட குமுறல்களையும், கொந்தளிப்பையும் பார்க்கும்போது, அவ்வளவும் இந்த நாட்டில் உள்ள சர்க்காரை மனமிளகச் செய்யவில்லை என்பதைத்தான் உணர்த்துகிறது.

நான் இங்கே பேசுகிறேன்—விடுதலையானதும் என்ன பேசுகிறார்கள்? தாக்கிப் பேசுகிறார்களா? அப்படியென்றால் வழக்குத் தொடரலாம்—என்று, ஒற்றரை சர்க்கார் அனுப்பி யிருக்கிறார். ஜூலை 15-ல் பார்த்த அதே ஒற்றரை இன்றும், இங்கே பார்க்கிறேன்.

ஜூலை 15ந் தேதியன்று கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் உயிர் அறுத்து, தங்கள் பிணங்களைக் குழியில் தள்ளி, கல்லறைகளாகக் காட்சியளிக்கும் திராவிட மாணிக்கங்களுக்கு என் வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

"எப்படிப் போராடினோம்? 'கல்லக்குடி' என்று ஒட்டினோம்—தண்டவாளத்தின் மீது படுத்தோம்—'பொது மக்களுக்குத் தொல்லை தராதீர்கள்—எழுந்து செல்லுங்கள்' என்று போலீஸ் அதிகாரி கேட்டார்,

நான் சொன்னேன்: 'இது என்கள் திடீர் முடிவல்ல,' நான் நேற்றே லாலகுடியில் கூறியிருக்கிறேன்; இது மாற்ற முடியாத முடிவு,'—என்று.

எங்களுக்குப் பக்கத்தில் இருந்த எஞ்சின் கிளம்பியது—அதன் சக்கரங்கள் சுழன்று எங்களருகே வந்தன—

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

திருச்சி வரவேற்புக் கூட்டத்தில்

மு. கருணாநிதி

ஆற்றிய உரையின் சாரம்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தனும், என்னுடன் படுத்திருந்த நண்பரும் தோழர்களும் கடைசி

(4-ம் பக்கம் பார்க்க)

நினைத்துப் பார்த்தார்களா?

"இன்று கருப்பையா பாரதி மரணத்திற்கு இவ்வளவு துடிக்கிறார்களே, அன்று உச்சிக் கிளையில் தூக்கிலே தொங்கினாரே, வேலாயுதம், அவரது அன்பு மனைவியின் அழுகுரலையும், 'அப்பா, அப்பா' என்று துடித்த அவரது மகனையும் நினைத்துப் பார்த்தார்களா? நெல்லிக்குப்பம் மஜீத்—முஸ்லீம் இளைஞன், அவன் வயிற்றிலே கட்டாரி பாய்ந்து கொட்டிய குருதியைக் கண்டு கதறியழுத அவன் குடும்பத்தினரைப்பற்றி நினைத்தார்களா? சென்னை பாண்டியன் முடிவை யார்தான் மறக்க முடியுமா?

பளிங்கு முன் நின்று 'காட்டுமிராண்டி' என்று கூற வேண்டிய நேரு, நம்மைப் பார்த்துக் கூறிவிட்டார்!

"யாரைப் பார்த்து காட்டுமிராண்டிகள் என்கிறார் நேரு? நாம் யார்? நமது சரித்திரம் என்ன? எதிரியை அழித்து வெற்றிக் கொடி பிடிக்கும்வரை, தன் வாளை உறையிலிடாத வீரர்கள் வாழ்ந்த நாடு இது. திரும்பிப் பார்க்கிறோம்—தமிழர்களை இகழ்ந்தார்கள் என்ற காரணத்துக்காக, கனக விசயன் மீது கல் ஏற்றிய சேரன் செங்குட்டுவனின் வாள் ஜொலிக்கிறது! திரும்பிப் பார்க்கிறோம்—தமிழ் காத்த மன்னர்கள், தமிழ்ப் பெருமக்கள் மதுரையிலே வீற்றிருந்த கண்கொள்ளாக் காட்சி தெரிகிறது! திரும்பிப் பார்க்கிறோம்—சோழ நாடு, வளம் பெருக்கும் காவிரி நதி, அதன் கரையிலே மலர்ச் சோலைகள். அங்கே கொஞ்சுமொழி பேசும் காதலர்கள், அவர்கள் காதலைச் சொல்லும் அழகு தமிழ்க் காவியங்கள்—இவைகளைக் காண்கிறோம்."

பண்டித நேரு, 'நான்சென்ஸ்' என்று சொன்னார். — தஞ்சைப் பொதுக்கூட்டத்தில் அண்ணாதுரை, "மன்னிப்போம், மறப்போம்" என்றார்.

ஒரு தடவை மறந்தோம்—மன்னித்தோம்.

மீண்டும் திருத்தணியிலே நடந்த அறப்போரை 'நான்சென்ஸ்' என்று கூறினார்.

திருத்தணியில் நடைபெற்ற அறப்போரில் வட ஆற்காடு மாவட்ட செயலாளர் ஏ. கே. கிருஷ்ணசாமி உள்ளிட்ட 200 பேர் கலந்துகொண்டனர்;

(4-ம் பக்கம் பார்க்க)

உரிமை கேட்டதற்கு பரிசு தோட்டாக்களா?

"நாம் செத்து மடிந்தோம்—ஐயாயிரம் பேர் சிறை புகுந்தோம். லால்குடி நடராசனுக்கு திருமணம் ஏற்பாடாகி இருந்தது; அந்த வீரனின் உடலில் குண்டு பாய்ந்தது. அவன் தாய் கதறியழுத காட்சி மறைந்துபோகுமா? கேசவன் என்றொரு தோழர்—அவர் மூளை சொட்டச் சொட்ட 'ஆவ், ஆவ்' என்ற துடிப்புடன் மாண்டு போனார். செபஸ்டியன் ராஜு-அவரது ஆண்குறி குண்டினால் அழிக்கப்பட்டுவிட்டது. அந்தத் திராவிட இளைஞன், தன் வாழ்க்கை இன்பத்தைக் காணவே முடியாது செய்துவிட்டார்கள். நாங்கள் உரிமை கேட்டோம்; ஆச்சாரியார் தோட்டாக்களால் பேசிவிட்டார்."

ஆதரிக்காது போனாலும் தூற்றாது இருக்கலாமே?

"கம்யூனிஸ்டுகள் எங்களை ஆதரிக்காது போகட்டும்; ஆனால், தூற்றாது இருக்கலாம் அல்லவா? மதுரையில் கருப்பையா பாரதி மாண்டுபோனாராம். அதற்காக எங்களைப் பலாத்காரவாதிகள் என்று கம்யூனிஸ்டுகள் அறிக்கை விடுகிறார்களாம். இதுதானா நன்றி? நாங்கள் என்ன, தஞ்சையிலே நெற்போருக்குத் தீயிட்டோமா? சப்-இன்ஸ்பெக்டரைக் குத்தினோமா! மிராசுதார் வீட்டின்மேல் தீப்பந்தத்தைக் கொளுத்தினோமா? யார் பலாத்காரவாதிகள்?"

இவர்களுக்கு வேறு வழி நாதி?

"சேலம் சிறையில் 22 பேரைச் சுட்டுக் கொன்றார்கள். அதை இந்த நாட்டிலே எடுத்துச் சொல்ல எங்களைத் தவிர வேறு யார் நாதியிருந்தார்கள்? ஒவ்வொரு மேடையிலும் நான் அந்த இருபத்திரெண்டு பிணங்களையும் எழுப்பி எழுப்பிப் பேச வைத்தேன். அதையெல்லாம் மறந்து இவ்வளவு கீழ்த்தரமாகவா எங்களைப் பற்றிப் பேசுவது? நாங்கள் அடிபட்டோம்; அவதிப்பட்டோம்; யார் கேட்டார்கள்? இந்த நாட்டிலே நீதி அஸ்தமித்துப் போய்விட்டதா?"

'கணக்கைத் தீர்க்க வேண்டும்!' —இதைச் சொன்னவர் யார்?

"கருப்பையா பாரதி இறந்தால் அதற்குக் காரணம் யார்? அவரது மரணத்திற்கு நாங்கள் வருந்தாமல் இல்லை. அவருக்கும் ஒரு குடும்பம் இருக்கும்; இன்று அனாதையாக அந்த குடும்பம் தவிக்கும்; ஆனால், இந்த நிலைமை ஏன் வந்தது? மூன்றும் தேதி யார் பேசியது? கொடுத்தார்களே எங்களுக்கு அந்தப் பத்திரிக்கையை! 'கணக்கைத் தீர்க்க வேண்டு'மென்று பேசி பலாத்காரத்தைத் தூண்டிவிட்டது யார்?

சொந்தக் கதையை நினைத்தால் நீதிக் கட்சியைத் தூற்ற வெட்கம் பிறக்காதா?

"வெள்ளையன் திரு வி. க.-வை நாடு கடத்தினான்; அப்போது பதவியில் இருந்த ஜஸ்டிஸ் கட்சியினர், 'திரு வி. க.-வை நாடு கடத்தினால் ராஜினாமா செய்துவிடுவோம்' என்றார்கள். அவரை நாடு கடத்துவது நிறுத்தப்பட்டது. திரு. வி. க. தேசீயவாதிதான்; ஜஸ்டிஸ் கட்சியினர் அவரைப் பற்றிக் கவலைப்பட்டிருக்க வேண்டியதில்லை ஜஸ்டிஸ் கட்சிமீது குற்றம் சுமத்துபவர்கள் இதை உணரவேண்டும்."

ஜஸ்டிஸ் கட்சி வெள்ளையனுக்கு வால் பிடித்தது என்று கூறினார்களே. அக் குற்றச்சாட்டு ஒருபுறம் இருக்கட்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றும் முன்னணி வீரர்களில் பலர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்ததில்லை.

"சேலம் மாவட்டத்தில், ஜஸ்டிஸ் கட்சியினர் எங்களை விட்டுப் போய்விட்டார்கள். வெள்ளையனுக்கு வால் பிடித்தார் என்ற குற்றச்சாட்டு உண்மையாகவே இருக்கட்டும்—அதற்காக இக் கட்சியினர் மாறக் கூடாதா? ஜஸ்டிஸ் கட்சியே தேசிய மறுமலர்ச்சிக் கூடாரமாக மாறி

(4-ம் பக்கம் பார்க்க)

ஐவர் சிறையில்!

இன்று

87—வது நாள்

நம் நாடு

தி.மு.கழக இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 26—11—1953 வியாழன்

வருணாஸ்ரமத்தில் வீழ்ந்த வீரன்!

மற்றவர்களைக் கட்டாயமாக உழைக்கச் செய்து, தங்களுக்கென சொந்தத்தில் எந்தவித உடல உழைப்பும் இல்லாமல், இவ்வுலக வாழ்வின் வளங்கள் அனைத்தையும் இலகுவாக அனுபவிப்பதற்கு நரி குணம் படைத்த சிலர், கொலையினும் கொடிய குணத்தோடு, விரித்து வைத்த பலம் பொருந்திய வலையே அல்லாது, வருணாஸ்ரமத் தர்மம் வேறு ஒன்றும் இல்லை என்பதை நாட்டு நடப்பு உண்மையாக்கிக் கொண்டு இருக்கிறது.

வருணாஸ்ரம தர்ம சுரண்டல் இயந்திரத்தின் உச்சியில் உட்கார்ந்துகொண்டு அதை இயக்கி வந்தவர்களும், அதற்கு அழிவு ஏற்படாமல் கண்காணித்து அடிக்கடி ஒழுங்காகக் கெட்டிப்படுத்தி வந்தவர்களும், வருணாஸ்ரம ஏற்பாட்டில் சிக்கிச் சிதைந்த மக்களுக்கு, எந்த வகையிலும்—அறிவியல் துறையிலும் சரி, பொருள் இயல் துறையிலும் சரி—செய்த உருப்படியான நல்ல காரியங்கள் ஒன்றையாவது எடுத்துக் காட்டாகக் கூறுவதற்கில்லை.

அந்த ஓய்வு பெற்றுக் கிடந்த சிறு கூட்டம் குறிப்பிட்ட சமூக முன்னேற்றத்திற்கோ, அல்லது நித்தியபடி வாழ்வின் பயன் பெறுவதற்கோ உதவியுள்ளது ஒன்றும் கிடையாது. காட்டிய பாதை, கொடுத்துள்ள பங்கு. தங்களைத் தாங்களே தாழ்ந்தவர்கள் என்று தீர்மானித்துக் கொள்ளவும், தங்களுக்கு என்றென்றும் விமோசனம் கிடையாது என்று உறுதியாக நம்பிக் கிடக்கவும், உரிமை பற்றி எண்ணுவதும், மாபாதகம் என்று அச்சங்கொண்டு வாழவும், சொத்துடைமைத்தனத்தையே 'தர்ம' வாழ்வு என்று இருமாந்து இருக்கவுமான இழிநிலையைத்தான், அந்த நரிகுணம் கொண்டோர், ஈவு இரக்கம் துளியும் இல்லாமல், மற்ற சனாதன தர்ம ஏற்பாட்டின் சமூக மக்களிடை வலுக்கட்டாயமாகத் திணித்தார்கள்.

இதன் பலனாக, தாங்களும் வாழப் பிறந்தவர்கள் என்ற நினைப்பும், தங்கள் எதிர்காலத்தைப் பற்றிய உயர்ந்த லட்சியத்தைக் குறித்துக் கருதவும்; அதனை அடைய முயற்சித்தால் தங்களாலும் முடியும் என்ற நம்பிக்கை கொள்ளவும், வழிவகை அற்றவர்களாக, அறிவு முதிர்ச்சி பெறாதவர்களாக, பெருங் கூட்டமான மக்கள் இன்றும் இருந்து வருகிறார்கள் என்பது உண்மையிலும் உண்மையாகும். சனாதன ஏற்பாட்டு வலையில் சிக்கியவர்கள், தங்களை மக்களாகக் கூடக் கருதிக் கொள்ளாமல், வெறும் செடிகொடிகளுக்கு ஒப்பாகவே தாங்களையும் மதித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பது மிகைபடக் கூறியதாகாது.

வருணாஸ்ரமத் தர்மம், அகில உலகச் சிந்தனைக்கும், தத்துவ வளர்ச்சிக்கும், மெய்ஞான முன்னேற்றத்துக்கும், தனது பங்காகக் கொடுத்துள்ளது வெறும் பெரியதோர் பூஜ்ஜியமாகும். உலகத் தத்துவ வரலாற்றை, பாரபட்சமில்லாமல் ஆராய்ந்து பார்ப்பவர்கள், இந்த உண்மையான முடிவிற்குத்தான் வரமுடியும் என்பதிலும் ஐயமில்லை. பிறகு,

நான்கு ஜாதியாகத் துவக்கத்தில் உருவாக்கப்பட்ட வருணாஸ்ரமத் தாயம், காலப்போக்கில் சிதைந்து போய், காலாயிரம் ஜாதிகளாக மக்கள் கூட்டத்தைச் சிதறடித்துப் பிரித்து வைத்துவிட்டது. இந்த ஒன்றே போதும், வருணாஸ்ரமத் தர்மம், ஒரு தர்மம் அல்ல என்பதையும், அது நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒரு பொய் ஏற்பாடு என்பதையும், அக்கிரம சொரூபி எத்தர்களின் சித்து அது என்பதையும் மெய்ப்பிக்க. 'ஆண்டவன்' ஏற்பாடாக, கட்டளையாக, அந்தத் தர்மம் இருக்குமானால், இவ்வளவு அலங்கோலம் அதற்கு வரக் காரணம் என்ன என்பதை, அதைக் கட்டி அழும் 'உத்தமோ உத்தமர்கள்' விளக்கங் கூற வேண்டும்.

வருணாஸ்ரமத் தர்ம விரிப்பு வலையால், ஏதோ நன்மை ஒரு காலத்தில் இருந்தது என்று சொல்லப்படுவதாக இருந்தால்கூட, அதற்கு இப்பொழுது துளியும் அவசியம் இல்லை என்பதை நாம் எடுத்துக் கூறத் தேவையில்லை. கேடு என்று தெரிந்தவுடன், அதை ஆழக் குழிதோண்டிப் புதைப்பது தான் அறிவுடைமையே ஒழிய, அதை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிப்பது, முதல்தரமான மோசடியும், பித்தலாட்டமும் ஆகும்.

இந்த வர்ணாஸ்ரம முறை, 'இந்து' மதத்தின் அடிப்படையாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் நுழைந்த, பிறப்பில் உயர்வு தாழ்வு பேசாத இஸ்லாம் மதத்திலும், கிறிஸ்துவ மதத்திலும் இந்தச் சனாதனச் சனியன் நுழைந்து விட்டிருக்கிறது என்பதை; யூனியன் அமைச்சர் ஜகஜீவன்ராம் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

இந்து மதத்தில் உள்ள ஜாதியக் கேடுகளைக் கண்டு,

இஸ்லாம் மதக் கருத்துக்கள் வேகமாகப் பரவுவதைத் தடுக்க எழுந்த சீக்கிய மதத்தையும் இந்தச் சனாதனம் மாசுபடுத்தி இருப்பதையும் அந்த அமைச்சர் சுட்டிக் காட்டிச் சாடியிருக்கிறார். எப்படியும் இந்த வர்ணாஸ்ரமம் தொலைந்தாக வேண்டும் என்று ஜகஜீவன்ராம் இதயத் துடிப்போடு கண்டித்துக் கூறுகிறார். இவ்வளவு காலம் பிடித்தது, ஜகஜீவன்ராம் அவர்களுக்கு, டாக்டர் அம்பேத்கார் போல் மனம் திறந்து பேசுவதற்கு! எவ்வளவு நாளைக்குத்தான் உண்மையை மனதுக்குள்ளாகவே மூடி மறைத்து வைத்துக்கொண்டு இருப்பது?

புகைவண்டியில், நாலவர் ஐவர் உட்காருகிற இடத்தில் ஒரு மாமிச மலை படுத்துக்கொண்டு, இரவெல்லாம் நன்றாக உறங்கி, விடிந்ததும், புகை வண்டியை விட்டு இறங்கி, 'புகை வண்டிப் பிரயாணம் சுகப் பிரயாணம்' என்று சொல்வதற்கும், பெட்டிக்குள் நிற்கக்கூட இடம் கிடைக்காமல் உயிரையும் திரணமாக மதித்து, வாயிற்படியில் கால்கடுக்க நின்றுகொண்டு, உறக்கம் கெட்டு, உடலும் உள்ளமும் கெட்டு, காலையில் புகைவண்டியை விட்டு இறங்குகிற அப்பாவி, 'பிரயாணம மகாமோசம்' என்று கூறுவதற்கும் எவ்வளவு வேற்றுமை ஒற்றுமை உண்டோ, அவ்வளவு உண்டு, பார்ப்பன மகன் வருணாஸ்ரம தர்மத்தை ஆதரித்துப் புகழ்வதற்கும், வருணாஸ்ரமத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்று அமைச்சர் ஜகஜீவன்ராம் கூறுவதற்கும்!

வருணாஸ்ரமத்தில் வீழ்ந்த வீரன் ஜகஜீவன்ராம் கூறுவதுதான உண்மை. அவர் விருப்பம் வெற்றி பெற வேண்டுமென்பதுதான் நமது ஆசை. அதுவே நமது உழைப்பின் உயிர்நாடி. திருச்சியில வேத வியாசர் பந்தலில் கூடிய வேத வித்துக்களாம் பார்ப்பன மக்களுக்கு, அமைச்சரின் அறிவுரையைக் காணிக்கையாகத் தருகிறோம்.

அவர் தி. மு. கழகம் அல்ல என்பதையும் அறிந்து, அவரையும் ஒழிக்க சல்லடம் கட்டட்டும், திருச்சி வேத வியாசர்கள் என்று கூறிக்கொள்ளுகிறோம்.

போதிய குற்றச்சாட்டுகள், சாட்சியங்களுடன் காமராசர் டெல்லி செல்கிறார்!

சென்னை, நவ. 24—

சென்னை முதலமைச்சர் பதவியிலிருந்து சி. இராசகோபாலாச்சாரியார் விலக வேண்டுமென்று கூறும் சட்டசபைக் காங்கிரசு உறுப்பினர்களின் கையெழுத்திட்ட அறிக்கையுடன், டிசம்பர் 5-ம் தேதி டெல்லியில் நடக்க இருக்கும் அகில இந்திய காங்கிரசுக்குழுக் கூட்டத்திற்கு, தமிழ்நாடு காங்கிரசுக் குழுத் தலைவர் காமராசர் செல்வாரென்று தெரிகிறது.

காமராசரிடம், ஆச்சாரியாரின் தலைமையை எதிர்க்கும் சட்டசபை காங்கிரசு உறுப்பினர்கள், தங்கள் கருத்தைத் தந்தி மூலமாகக்கூடத் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

நேருவின் பிரத்தியேக அழைப்பின் பேரிலேயே காமராஜர் டெல்லி செல்கிறார்.

இந்த அறிக்கைபற்றி ஆலோசிக்க டில்லியில் காங்கிரசு பார்லிமெண்டரி குழு கூடுமென்றும் இதில் இது பற்றி ஒரு முடிவு ஏற்படுமென்றும் தெரிகிறது.

இக்கூட்டங்கட்கு ஆச்சாரியாரும் செல்கிறார்.

ஆச்சாரியாரின் இன்ப நினைவுகள்

ஓசூர், நவ. 24—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார், தான் பிறந்த கிராமமாகிய தொரப்பள்ளிக்கு இன்றுபோய்ச் சேர்ந்தார்.

பள்ளிப் பருவத்தில், தான் துள்ளி விளையாடிய இடங்களையெல்லாம் பார்த்தவர் உறவினர்களை அழைத்தார் பேசினார்.

அங்கிருந்து, தான் படித்த ஓசூர் பள்ளிக்குச் சென்றார். அதன்பின் ஆஞ்சநேயரை வணங்கிவிட்டு பெங்களூர் சென்றார்.

சென்னையில் ஐவர் வரவேற்பு விழா

30—11—53 திங்கள் காலை 9 மணிக்கு தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா, செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் சென்னை சிறையிலிருந்து விடுதலை பெறுவர்.

அன்று மாலை, சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் தி. மு. கழகத் தலைவர்கள் ஐவரையும் வரவேற்க மாபெரும் வரவேற்புக் கூட்டம் நடைபெறுவதற்கான முயற்சிகள் நடந்துவருகிறது.

எனவே, நவம்பர் 30-ம் தேதியன்று நடைபெற இருக்கும், காலை, மாலை இரு நிகழ்ச்சிகளிலும், கிளைக் கழகங்களும், கழகத்தைச் சார்ந்த படிப்பகங்கள், மன்றங்கள் ஆகியவைகளும் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

கே. எம். கண்ணபிரான்,
தி. மு. கழகம், சென்னை மாவட்டம்.

குறிப்பு:— வரவேற்பு அளிக்க விழையும் கழகங்கள் முன்கூட்டியே மாவட்டச் செயலாளருக்கு அறிவித்து அனுமதி பெறுவது முக்கியம். (தோழர் மதியழகன் ஏற்கனவே 10 நாட்கள் பரோலில் வெளி வந்து இருப்பதால், அந்த 10 நாளையும் சிறையில் கழிக்க வேண்டியதாகிறது.)

ஏ. ஆர். முதலியார் மீது — இந்தியப்பிரதிநிதி பாய்ச்சல்!

— (:) —

ரஷ்யாவில் கட்டாய வேலைமுறை உண்டு என்றதற்குச் சீற்றம்

ஐ. நா.-வில் தோழர் வெங்கட்ராமனின் முதல் "ஆலாபனம்"!

நியூயார்க், நவ. 24—

சோவியத் நாடுகளில் கட்டாய வேலைமுறை இருப்பது உண்மை என்று கருத்து தெரிவித்து திரு. ஏ. ராமசாமி முதலியாரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஐ. நா. கமிட்டியின் அறிக்கையை, இன்று இந்தியப் பிரதிநிதி தோழர் ஆர் வெங்கட்ராமன் கண்டித்துப் பேசினார்.

அறிக்கைபற்றி விவாதித்த ஐ. நா. சமுதாய, மனிதாபிமான கமிட்டிக் கூட்டத்தில் பேசிய அவர், திரு. ராமசாமி முதலியாரும், மற்ற இருவரும் ஐ. நா. பொதுக்காரியதரிசியில் தனிப்பட்ட முறையில அவர்களின் சொந்தத் தகுதி திறமையின் பேரில் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், அவர்கள் தம் தம் தாய் நாடுகளின் பிரதிநிதிகள் அல்ல வென்றும், அவர்களது தீர்ப்பு அவர்களுடைய சொந்த கருத்தே என்றும் சொன்னார்.

"இக்கமிட்டிக்குத் தலைவர் ஒரு இந்தியர் (ஏ. ஆர்.) என்றாலும், எங்கள் அதுக்குழு கமிட்டியின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை," என்று குறிப்பிட்டார் தோழர் வெங்கட்ராமன்.

பள்ளி செல்லும் பிள்ளைகள் எண்ணிக்கையை பெருக்குவதை தவிர வேறில்லை

ஆச்சாரியாரின் கல்வித் திட்டம்பற்றி பருலேகர் கமிட்டி உறுப்பினர் கருத்து

காரைக்குடி, நவ. 24—

"சென்னை சர்க்காரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம், பள்ளி செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கையை, அதிகப்படி செலவில்லாமல் இரட்டிப்பாக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும்," என்று பருலேகர் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் பி. பி. டே கூறியுள்ளார்.

இன்று காரைக்குடி ஆசிரியர் சம்மேளனத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி வாரத்தைத் துவக்கி வைத்த அவர், மேலும் கூறியதாவது:

"வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய தொழில் கல்வி வேண்டும் என்ற இலட்சியத்திற்கும், இன்றைய வெறும் புத்தகப் படிப்பிற்கும் இடையே ஒரு நடுத்தரமான ஏற்பாடே ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம்,"

என்றும் குறிப்பிட்டார்.

அனாதைக் குழந்தைக்கு 'அவ்வை' எனப் பெயர்!

விருதுநகர், நவ. 25—

விருதுநகருக்கு அருகே உள்ள மல்லூர் சந்தை கிராமத்தில், பிள்ளையார் கோவிலில் ஒரு பெண் குழந்தை கண்டெடுக்கப்பட்டது. பிள்ளையார் கோயிலில், கண்டெடுக்கப்பட்டதால் அக்குழந்தைக்கு 'அவ்வையார்' எனப் பெயரிடப்பட்டதாம்

மறுநாட் காலை, குழந்தையின் தாயை விசாரித்ததில், தன் கணவன், தன் கற்பின்மீது ஐயுறவே, அவர் குழந்தையைக் கோயிலில் விட்டுச் சென்றதாகக் கூறினார்.

தமிழகமெங்கும் தூத்துக்குடி வாரம்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பி"யும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியின் சம்பந்தப்பட்டவையாதலால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டுமே பிரசுரித்துள்ளோம்.

சென்னை 17-வது வட்டம்

6—11—53ல், சென்னை 17-வது வட்ட தி. மு. கழக சார்பில் தூத்துக்குடி நாள் தோழர் சு. பாலன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் அ. குப்புசாமி, மு மாசிலாமணி, ஏ. கணேசன் மற்றும் பல தோழர்கள், தூத்துக்குடித் தோழர்கள் நிலை பற்றியும், சதி வழக்கின் நிலைமை பற்றியும் சொற்பொழிவாற்றினர். பின்னர் தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிவில்லிபுத்தூர்

5—11—53ல், நாயர் சதுக்கத்தில், தி. மு கழகச் சார்பில் தோழர் கோ பெருமாள் தலைமையில தூத்துக்குடி தினம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கை. ஞானியரசன், ஆ. திராவிடமணி ஆகியோர் பேசினர்.

சத்தியமங்கலம்

12—11—53ல், தி மு கழகச் செயற்குழுக் கூட்டம் நூர்ஜகான் தையல் நிலயத்தில் தோழர் என் எச். அமீர் தலைமையில் கூடி, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேறியது. பின்னர் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட தோழர் சிவகொழுந்துவிற்குப் பதிலாக தோழர் இரா. குமாரசாமி அவர்கள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கமுதி

8—11—53ல், நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுவில், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ச. வி. நகரம்

15—11—53ல், இந்நகர் தி. மு. கழக அங்கத்தினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தூத்துக்குடி தீர்மானங்கள நிறைவேற்றபபட்டன.

தேவாரம்

8—11—53ல், தி. மு. கழகக் கட்டிடத்தில் தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாண்டமங்கலம்

6—11—53ல், சோமசுந்தரம் திடலில் தோழர் வை. ரத்தினம் தலைமையில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. பி மூர்த்தி, வி. கே. ராசு, வி. எ. ராமநாதன், இரா. அரங்கசாமி ஆகியோர் தூத்துக்குடி நாள் பற்றிப் பேசினர்.

செல்லப்பம்பட்டி

6—11—53ல், சவுந்திர பாண்டியன் திடலில், தோழர் க. இளங்கோ தலைமையில் தூத்துக்குடி நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ச. முத்துகிருஷ்ணன், செ. ம. அங்கமுத்து, செ மா. ரத்தினம் ஆகியோர் பேசினர்.

லால்குடி

15-11-53ல், சிவன் கோவில் முன்பு, தோழர் எல். எம். தங்கராசன் தலைமையில் தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழியர்

சி. ஆர். அபிநயக் கச்சேரி!

நேரு வந்தார் — கருப்புக் கொடி காட்டினோம். அவருக்கு இந்தோனேஷியாவிலும் கருப்புக் கொடி காட்டினார்கள். அங்கே அசையாத நாக்கு இங்கே அசைந்திருக்கிறது. அவர் காட்டுமிராண்டி என்று கூறியது போதாதென்று ஆச்சாரியார் பாட, திருமங்கலத்தார் ஆட, இங்கே சி. ஆர். சர்க்கார் அபிநயக் கச்சேரி நடையெறுகிறது. இந்த மந்திரிமார்கள் போகும் இடங்களிலெல்லாம் ஆச்சாரியாரை புகழாமல் பேச்சை முடிக்கிறார்களா? காமராசர் அதை அடக்க எவ்வளவோ முயல்கிறார்; ஆனால் ஆச்சாரியார் குண்டர்களை வளர்க்கிறார்.

—கருணாநிதி, திருச்சியில்.

அருண்மொழி பி ஓ. எல்., அவர்கள் "யார் காட்டுமிராண்டிகள்" என்பது பற்றி 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

சண்முகபுரம்

8—11—53ல், திராவிட முன்னேற்ற பிரசாரக் கழக சார்பில், சிவந்தாகுளம் ரோடு மந்திரம் மைதானத்தில் தோழர் என். ராஜாமணி தலைமையில் நடைபெற்ற தூத்துக்குடி வாரப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. தானமுத்து, அரைபாண்டியன், வெ. அருணசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தூத்துக்குடி தீர்மானமும், பழிவாங்கப்பட்டுள்ள தோழர்கட்கு வேலை வாங்கித் தரவேண்டுமென தொழிற் சங்கத்தைக் கேட்டுக்கொண்டும், அப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் சிலருக்கு வர்த்தகர்கள் உடனடியாக வேலைதர வேண்டுமென வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

க. புதுப்பட்டி

16—11—53 அன்று, தி மு கழகத்தின் சார்பில், தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்ய வேண்டுமென, ஏராளமான பொது மக்களிடம் கையெழுத்துக்கள் வாங்கி, அவ்விண்ணப்பத்தை அரசியலாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடி

மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்குமாறு ஒரு மகஜர் சென்னை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

மேலச்சண்முகபுரம்

22—11—53ல், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கும்படி. கோரி, பொது மக்களிடமிருந்து மகஜர்களில் 715 கையெழுத்துக்களும், 320 தபால் கார்டுகளும் சென்னைப் பிரதமருக்கு அனுப்பியிருக்கிறோம் என தி. மு. கழக செயலாளர் சிவபெருமான் அறிவிக்கிறார்.

எத்தனை கல்லறைகளோ?

"இப்போது நாம் நடத்திய போராட்டம், நம்முடைய இறுதிப் போராட்டமல்ல; வருங்காலத்தில் நாம் நடத்தப்போகும் போராட்டங்களுக்கு இது ஒத்திகையாகும். என்றைக்கு திராவிட நாடு தேவை என்று கூறினோமோ, அன்றைக்கே நமது போராட்டம் துவங்கி விட்டது இன்னும் எத்தனை தியாகங்கள் செய்ய வேண்டுமோ தெரியாது; எத்தனை கல்லறைகள் ஏற்படுமோ தெரியாது."

—திருச்சியில் கருணாநிதி

தோழர் கருணாநிதி காஞ்சி வருகை

★

தோழர் மு. கருணாநிதி அவர்கள் 28—11—53 சனி அன்று காலை, திருவாரூரிலிருந்து ரயிலில் புறப்பட்டு, பிற்பகல் காஞ்சீபுரம் வந்து சேருவார். மாலையில் அவருக்கு வரவேற்பும், பாராட்டுக் கூட்டமும் நடைபெறும்.

நன்றி

திருச்சி, நவ. 25—

திருச்சி மத்திய சிறையிலிருந்து, 21-ம தேதி விடுதலையடைந்த தோழர்கள் கருணாநிதி, முல்லை சத்தி, மணப்பாறை கணேசன், ராஜ், குமாரவேல், உறையூர் குழந்தைவேல் ஆகியோரை வரவேற்று ஊர்வலம், பொதுக் கூட்டம் முதலியவைகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த திருச்சி இயக்க முன்னணி வீரர்கள் பெரியகடை வீதி உஷா டைமண்ட்ஸ் பி. பாண்டுரங்கன, ஷராப் எ. நடராசன, ஷராப எ. சோமசுந்தரம், புருஷோத்தமன, ஷராப் நரசிம்மன, குப்புசாமி, ஷலாவுதீன, ராமலிங்கம, எஸ். ஏ. ஜி. ராபி, ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி, மலைக்கோட்டை ரத்தினம், அருணகிரி, கிருஷ்ணமூர்த்தி, முத்து, ராமசாமி, சிந்தாமணி தி. வீ. பொன்னுசாமி, சுதர்சனம, ஐ. எம ஷரீப, தொண்டர் படையினர் மற்றும உறையூர், புத்தூர், பீமநகர், பாலக்கரை, எடத்தெரு, வரகனேரி, பெரியகடை வீதி. 20-வது வட்டம, மலைக்கோட்டை தி. மு. கழக தோழர்களுக்கும, சிறை வாயிலிலிருந்து ஊர்வலம முடிவடையும் வரையில் மலா மாலைகளும், துண்டுகளும, குளிர்பானங்களும் வழங்கிய தோழர்களுக்கும, அன்று சிறந்த முறையில் விருந்தளித்த கல்லகுடி பிரல் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் மற்றும் எங்கள் அழைப்பிற்கிணங்கி வெளியூர்களிலிருந்து வந்திருந்த அன்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை செலுத்துகிறோம.

கல்லக்குடி அறப்போர் குழு, திருச்சி.

இலங்கைத் தமிழ்க் குழந்தைகளுக்கு அநீதி?

கொழும்பு, நவ. 23—

தமிழர்களுக்குக் கல்வி போதிக்க முடியாதென கொழும்பிலும், மற்றமற்ற மாகாணங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் குழந்தைகளை வெளியேறும்படி கோட்டில் கொடுக்கப்பட்டு விட்டதாக சொல்லப்படுகிறது. இந்த முன்னறிவிப்புகள் தலைமை ஆசிரியர்களால் தரப்பட்டதாம்.

இந்த நெருக்கடியைச் சரிப்படுத்த இலங்கை சர்க்கார் தலையிட்டிருப்பதாகத் தெரிகிறது.

கழகக் கூட்டம்

★

மதுரை

29—11—53 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

இடம்: வ. உ. சி. திடல்

தலைவர்:

டாக்டர் அருணசலம் M. B. B. S.

பேச்சாளர்கள்:

கவிஞர் கண்ணதாசன்

மு. க. வணங்காமுடி

ஆ. அமுதரசு

காஞ்சியில் கருணாநிதிக்கு பாராட்டுக் கூட்டம்

★

"28—11—53 மாலை, காஞ்சிபுரம், கெங்கைகொண்டான் மண்டபம் அருகில் நடைபெறும். மாலை 6 மணிக்கு புகைவண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள்வழியாக வந்து பொதுக்கூட்டத்தை வந்தடையும்," என நகர செயலாளர் அறிவிக்கிறார்.

குறிப்பு:—தொண்டர்கள் எல்லாம் வரவேற்புக்கான எல்லா வேலைகளும் செய்துவருகிறார்கள்.

காஞ்சியில் தலைவர்களுக்கு வரவேற்பு

★

தோழர்கள் அண்ணுதுரை, நெடுஞ்செழியன், சம்பத், நடராசன ஆகியோருக்கு 1-12-53 அன்று, காஞ்சியில் மாபெரும் வரவேற்புப் பொதுக்கூட்டம், கண்ணன்கோட்டகை மைதானத்தில் நடைபெறும்.

வேலூர் தி. மு. கழகத் தோழர்களுக்கு

29—11—53 ஞாயிறு காலை 9 மணிக்கு, வேலூர் தோட்டப்பாளையம் தி. மு. கழகக் காரியாலயத்தில், நகரக் கிளை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் 'உறுப்பினர் கடமை' என்னும் பொருள் பற்றிப் பேசுவார். நகரக்கிளைக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வர கோரப்படுகிறார்கள்.

* * *

மாலை 3 மணிக்கு தி. மு. கழக மாணவர் கூட்டம் நடைபெறும். 'மாணவர் கடமை' பற்றி தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி பேசுவார்.

தியாகராயர் பகுத்தறிவு மன்றம்

27—11—53 வெள்ளி மாலை 6 மணிக்கு, மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். அதுபோது, 'கட்சிகளும், நாட்டு நிலையும்' என்பது பற்றி, தோழர்கள் துரை, இன்மொழி, செல்வராஜ், கணேசன் ஆகியோர் பேசுவர். தோழர் கரிகாலன் தலைமை வகிப்பார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 4469-10-5

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

136-வது நாள்

நாகையில் புயல்

ஆண்டுவிழா கொண்டாட இருக்கிறது!

நாகை, நவ. 25—

"நாகையில் மூன்று நாட்களாக நல்ல மழையும் புயலின் அறிகுறியாக வேகமான காற்றும் அடித்தவண்ணமிருக்கிறது—நாகை போர்ட் ஆபீஸில புயல் எச்சரிக்கை கொடிகள் இரண்டு நாட்களாக பறக்கிறது. நாகைக்கு சிங்கப்பூரில் இருந்து வந்த "ஜலகோபால்" கப்பல், பிரயாணிகளை இறக்காமல் சென்னை சென்று விட்டது. சென்னையில் இருந்து வந்த "ரஜூலா" பிரயாணிகளை ஏற்றாமல் கரையிலேயே இன்றுவரை இருந்துவிட்டு, திரிகோணமலைக்கு சென்று விட்டது. கடல் மிகவும் கோரமான நிலையில் இருக்கிறது. சுமார் 1 லட்சம் செலவில், போன புயலுக்குப் பிறகு செய்த துறைமுக வேலைகள் அனைத்தையும் பாழாக்கிவிட்டது. கடலுக்கும், ஆற்றுக்கும் (பக்கத்தில் கடுவை ஆறு ஓடுகிறது) இருந்த மண்மேடு கரைந்து, கடலும் ஆறும் ஒன்று சேர்ந்துவிட்டது.

நாகையில் பொதுமக்களுக்குத் தண்டோரா மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது, மக்கள் பீதி அடைந்துள்ளனர். இரவு முழுவதும் நல்ல மழை பெய்துள்ளது. போன புயல் இதே மாதம் (நவம்பர் 30-ம் தேதி) அடித்ததால், புயல் ஆண்டு விழா கொண்டாடப் போகிறது என்று, மக்கள் பேசிக்கொள்ளுகின்றனர்.

(ந. நி.)

கல்வி எதிர்ப்புப் பெரும் படை

தி. க. முயற்சி

திருச்சி, நவ. 22—

ஆங்கிலப் புத்தாண்டின் தொடக்கத்தில் 1954 ஜனவரி 2, 3 தேதிகளில் ஆச்சாரியாரின் வர்ணாசிரம புனர் நிர்மாணக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, திராவிடர் கழகம் துவக்க இருக்கும் போராட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக, 'ஆச்சாரியார் கல்வித் திட்ட எதிர்ப்புப் படை' ஈரோட்டிலிருந்து புறப்பட்டு, திருச்சி வழியாக சென்னை சேர்வது என்று, திருச்சி, புத்தூர் பெரியார் மாளிகையில் இன்று பெரியார் முன்னிலையில், தோழர் வேதாசலம் அவர்கள் தலைமையில் கூடிய அமைப்புக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உடல் உழைப்பால் உயிருக்குத் தீங்கில்லை

லண்டன், நவ. 25—

'உடல் உழைப்பால் உயிருக்குத் தீங்கு, எதுவும் ஏற்படுவதில்லை; மேலும் மேலும் உடம்பு பலம் பொருந்தி வாழ உடலுழைப்பு வழி செய்கிறது" என்று பிரிட்டிஷ் மருத்துவ நிலையம் முடிவு செய்துள்ளது.

காரியாலயங்களில் வேலை செய்பவர்கள்தான் இருதயக்கோளாறினால் அதிகமாக மரணமடைய நேரிடுகிறதென்றும் முடிவில் கூறப்பட்டுள்ளது.

சென்றவிடமெல்லாம் சிறப்பு

கருணாநிதியின் வரவு கண்கொள்ளாக் காட்சி!

(நமது நிருபர்)

திருச்சி, நவ. 21—

"ரோம் நாட்டு விடுதலை வீரன் ஜூலியஸ் சீசருக்கு அளித்த வரவேற்பு, அமெரிக்க நாட்டு அதிபன் ஆப்பிரகாம் லிங்கனுக்கு வெள்ளை மாளிகையின் முன் அளிக்கப்பட்ட வரவேற்பு அட்லாண்டிக் கடலைத் தாண்டி அமெரிக்க மண்ணை மிதித்துத் தாயகம் திரும்பிய கொலம்பசுக்கு ஸ்பெயின் நாட்டு அதிபன் பெர்டினண்டும், இஸ்பெல்லாவும் அளித்த வரவேற்பு, இமய வரம்பில் கல் எடுத்த சேர மன்னன், செங்குட்டுவனுக்கு சேர நாட்டு மக்கள் அளித்த வரவேற்பு—இவைகள் அனைத்தையும் நேருக்குநேர் நினைவூட்டுகிறது—கல்லக்குடி அறப்போர் தலைவர் தோழர் கருணாநிதிக்கு திருச்சி மாநகர் அளித்த வரவேற்பு!

21—11—53 அன்று பொழுது புலர்ந்ததும், திருச்சி மத்திய சிறை; நன் முன்னே ஆயிரக் கணக்கான மக்கள் கூடி நிற்பதைக் கண்டது.

தி. மு. கழகத்தின் தலைவர்கள், தொண்டர்கள், பொது மக்கள் அனைவரும் அங்கே கூடியிருந்தார்கள்; தமிழ் நாடே அங்கே திரண்டுவந்து விட்டதோ என்று நினைக்கும் அளவுக்கு, அவர்கள் குழுமியிருந்த காட்சி இருந்தது.

காலை 10½ மணிக்கு சிறைவாயில் திறந்தது; கருணாநிதி குழுவினர் புன்னகை பூத்த முகத்துடனும், கூப்பிய கரங்களுடனும் வெளியே வந்தார்கள்.

காத்து நின்ற இருபதாயிரம் மக்களிடையே ஒரே ஆரவாரம்; கட்டியணைத்துக்கொண்டவர்கள்—'வீரர்களே வாழ்க,' என்று முழக்கமிட்டவர்கள், — ஆரத்தில் நின்றபடி தங்கள் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரையும் துடையாமல் ஆர்வத்தால், கருணாநிதியைப் பொதுமக்கள் தூக்கிச் சென்ற காட்சியைக் கண்டோர்—ஏராளம்.

வீரர்களை ஏற்றிய கார் புறப்பட்டது. அதன் முன் ஆயிரக் கணக்கில் மக்கள் ஊர்வலம் அணிவகுத்துச் சென்றது.

"கருணாநிதி வாழ்க; அண்ணாவை விடுதலை செய்; தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கு" என்ற முழக்கங்களுடன் ஊர்வலம் சென்றது. வழியெங்கும் வரவேற்புகள்; பல இடங்களில் மக்கள் மகிழ்ந்து நின்று மலர் தூவினர். திருச்சி மாவட்ட தி. மு. கழக அலுவலகத்திற்கு ஊர்வலம் வந்து சேர பகல் 1 மணியாயிற்று.

அன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில், "ரோம் நாட்டு விடுதலை வீரன் ஜூலியஸ் சீசருக்கு ரோம் நகரத்து மக்கள் அளித்த வரவேற்பு பற்றி படித்திருக்கிறேன். திருச்சி நகரம் அடபடிப் பட்டதோர் வரவேற்பை கருணாநிதிக்கு அளித்தது," என்று தோழர் அரங்கண்ணல் குறிப்பிட்டார்.

"மதுரையிலிருந்து அறப்போருக்கு ஆயிரம் தொண்டர்களை அனுப்புவேன்; போராட்டம் வெற்றி பெற துணைபுரிவேன்," என்று மதுரை முத்து பேசும்போது குறிப்பிட்டார்.

"நான் இரண்டாயிரம் காளைகளைக் கொண்டு வருவேன்; கோவை மாவட்டம் அதற்குத் தயாராய் இருக்கிறது," என்று, ஈரோடு தோழர் என். அப்பாவு குறிப்பிட்டார்.

'நான் எத்தனைபேரை இங்கே அனுப்ப முடியும் என்று கூற முடியாது; 30-ந் தேதி மாலை அண்ணா அவர்கள் கடற்கரையில் பேசும்போது அவர் முன் கூடியிருக்கும் கழகக் காளைகளை நீங்களே எண்ணிக்கொள்ளுங்கள்; அவ்வளவு பேரையும் என்னால் இப்போராட்டத்திற்கு அனுப்ப முடியும்," என்று சென்னை தோழர் சண்முகப்பிரான் அவர்கள் கூற, அப்போது அங்கே கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் எழுப்பிய பேரொலி, தி. மு. கழகத்தின் சக்தியை இந்தப் பாசிச சர்க்காருக்கு எடுத்துக் காட்டுவது போலிருந்தது.

தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., என்.எஸ். இளங்கோ, முல்லைசத்தி பேசியபின், தோழர் கருணாநிதி நன்றி கூறினார்.

கல்லக்குடியில்

22—11—53 காலை 9 மணிக்குக் கல்லக்குடி அறப்போர் களத்தைப் பார்வையிடச் சென்ற கருணாநிதியை, கல்லக்குடி தி. மு. கழகம், வெள்ளனூர் தி. மு. கழகம், கல்லக்குடி பொதுமக்கள் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். முல்லை சத்தி, காரைக்குடி இராம சுப்பையா, பராங்குசம் ஆகியோருடன் அறப்போர் தலைவர் தப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார். பின்பு, அறப்போர்த் தொண்டர்கள், 'கல்லக்குடி' என்று அச்சடித்த தாளை ஒட்டுவதை நேரில் கண்டனர்.

திரும்பும் வழியில், துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமடைந்த தோழர் நடராசன் அவர்கள் குடும்பத்தினரை, லால்குடியில் சந்தித்துத் தனது அனுதாபத்தை தோழர் கருணாநிதி தெரிவித்துக் கொண்டார் லால்குடி வ. உ. சி. மன்றம் அவருக்கு வரவேற்பளித்தது.

பகல் 12 மணிக்கு திருச்சி வந்து சேர்ந்த கருணாநிதி குழுவினரை வரவேற்க தேவர் மன்றத்தில், 4 10 மாணவர்கள் கூடியிருந்தனர். திராவிட மாணவர் இயக்கத்தைத் தோற்றுவித்த பெருமை கருணாநிதியைத்தான் சேரும். அவருக்கு திருச்சி நகர மாணவர் கழகம் வரவேற்பளித்து மகிழ்ந்தது.

பகல் மணிக்கு தோழர் கருணாநிதி தன் சொந்த ஊர் சென்றார்.

திருச்சியிலிருந்து திருவாரூர் செல்லும் வழியில் திருவரம்பூர், அம்மாபேட்டை, பூதலூர் எங்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது தஞ்சை வந்தது — தோழர்கள் பதியும், பட்டுவும் காத்து நின்றார்கள்—மாலை போட்டார்கள்—மக்கள் கருணாநிதியைத் தூக்கிச் சென்றார்கள்.

நீடாமங்கலம் யாருடைய கோட்டை என்றோ சொன்னார்கள்—அப்படிச் சொன்னவர்கள் அங்கே வந்திருந்தால், தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டிருப்பார்கள்.

ஆரூர் அருகே வரவர, ரயில் முழுமையும் தி. மு. கழகக் கொடிகள்—ஆரூரில் தோழர்கள் ஜமால், தென்னன், டாக்டர் விஜயராகவன் மாலையிட்டு வரவேற்றார்கள்.

தோழர் கருணாநிதியின் தாயார் தன் மகனைக் கட்டி அணைத்துக்கொண்டார். அத்தாயின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அதைக் கண்ணுற்றோர் கண்களில் கண்ணீர் மல்கியது.

'கருணாநிதி வாழ்க' என்ற முழக்கம் கேட்டுத் திரும்பிப் பார்க்கையில், மன்னார்குடியில் இருந்து 60 பேர் — 16 மைல் வசதியில் ஊர்வலமாக வந்திருந்தார்கள்.

ஆரூர் நகரம், தன் புதல்வனுக்குத் தக்கதோர் வரவேற்பு அளித்தது.

மாலை, தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் அண்ணாதாசன், அம்பில்-தர்மலிங்கம், வைத்திலிங்கம் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் கருணாநிதி பேசினார். அவர், அவருடைய பேச்சு, தமிழ் முழக்கமட்டுமல்ல, திராவிடரின போர் முழக்கமாகவே இருந்தது.

அன்று அலட்சியம்!

இன்று ஆத்திரம்!!

★

முன்பு நம்மை அலட்சியப் படுத்தினார்கள்—இச் சிக் கட்சியிருந்தபோது! பின்பு திராவிடர் இயக்கமாக நாம் மாறினோம்: அப்போதும் அலட்சியப் படுத்தினார்கள்; இப்போது நாம் திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ந்தோம்—நம்மை அவர்களால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

கோவையிலே [illegible] சென்னையிலே [illegible] கணைக் [illegible] செலுத்தியது [illegible] கொடுமைக் கண்டபிறகு, பம்பாயில் சென்று நம்மைப் பற்றி பேசுகிறார். நம்மை அலட்சியம் செய்தவர்கள் ஏன் நம்மைப் பற்றிப் பேசுகிறார்கள்?

—திருச்சியில் கருணாநிதி

விடுதலை எப்போது என நினைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையாக உலகத்தை ஒரு தடவை பார்த்தோம்—கண்களை மூடிக் கொண்டோம்.

எங்களை நோக்கி வந்த ரயில் நின்றுவிட்டது—நாங்கள் கைது செய்யப்பட்டோம். அரியலூர் சிறைக்குக் கொண்டு சென்றார்கள்.

நாங்கள் பட்டப்பகலிலேதான் படுத்தோம்; ஏன்?— எங்கள் லட்சியத்தை எடுத்துச் சொல்ல எத்தனையோ முறைகள் சொல்லியும், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், தீர்மானங்கள் மூலமாக விளக்கிக் கூறியும் இந்த சர்க்கார் செவி கொடுக்காத காரணத்தால் படுத்தோம்.

ஒரு காலம் வரும்—அன்பர் ஆச்சாரியார், நாடு இழந்து, இந்த நாட்டு மக்களால் துரத்தப்பட்டு, 'என்னைத் தாருங்கள்' என்று இரவிலே தண்டவாளத்தின் மீது படுப்பார்!—அந்த நிலைமை வரத்தான் போகிறது!

ஆச்சாரியாருக்குப் பதவி ஜன்னி கண்டுவிட்டது. அதனால் தான் உளறுகிறார்—'சில்லி,' 'மூடம்ப' என்று ஏசுகிறார்—அதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? 5000 பேர் ஒரு நாளில் சிறை சென்றார்கள் என்றால், அமெரிக்காவின் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை 'உலகத்திலேயே பெரிய ரயில் நிறுத்தம் திராவிடத்தில் ஏற்பட்டது,' என்று எழுதியிருக்கிறது என்றால், எதற்காக, ஏன் போர் நடைபெறுகிறது?

* * *

இந்த நாட்டில் ஒரு சர்க்கார் நடக்கிறது. டால்மியாபுரம் என்ற பேரை மறைத்து கல்லக்குடி என்ற காலை ஒட்டியவன், இன்றுவரை தொண்டர்கள் அந்த இடத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். இந்த சர்க்காருக்கு நாங்கள் ஒட்டிய தாளைக் கிழிக்கத் தெரியவில்லையென்றால், ஒவ்வொரு நாளும் நேருவின் முகத்தில் ஒட்டுவதுபோல் கல்லக்குடி என்று ஒட்டுகிறார்கள் என்றால், அறப்போரில் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று பெருமையுடன் சொல்கிறேன்.

யு. என். ஓ.-வில் செஞ்சீனத்தைச் சேர்க்க மறுக்கிறார்கள்—அதற்காக மாசேதுங் தோற்றார்; சியாங்கே ஷேக் வெற்றிபெற்றார் என்று கூற முடியுமா? மாசேதுங் தோற்றார் என்றால் அது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறுதான், கல்லக்குடி அறப்போர் வெற்றி பெறவில்லை என்பது. அதன் இறுதிக் கட்டத்தை சீக்கிரம் அடைந்து விடுவோம்."

பளிங்கு முன் நின்று 'காட்டு.......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர்களையும், சேர்த்துத்தான், நேரு, 'நான் சொன்னேன்', என்று கூறினார்.

"நான் சொன்னேன் என்று கூறுதே—அதை வாபஸ் வாங்கு," என்பதற்கு ஆகத்தான் போராட்டம் நடத்தினோம்—ரயிலை நிறுத்தினோம்.

மீண்டும் நேரு வந்தார்—நம்மையெல்லாம், 'காட்டுமிராண்டிகள்,' என்று கூறிச் சென்றார்.

பாவம், நிலைக்கண்ணாடி முன்பு நின்று சொல்ல வேண்டியதை நம்மைப் பார்த்துக் கூறிவிட்டார். நேரு அவர்கள் தன்னை அறியாது துடுக்குத்தனமாகப் பேசியதால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை இன்னும் சில நாட்களில் புள்ளி விபரங்கள் சொல்லும்.

தன்னை அறியாமல் அவர் "ஏ நேருவே! உன்னிடம் காட்டுமிராண்டிகள் வாழ்கிறார்கள்" என்று கூறுகிறார்.

யார் காட்டுமிராண்டிகள்? 'திராவிடர்கள் வீரம் மிக்கவர்கள்; ஆரிய எதிர்ப்புப் போராட்டம் நடத்தியவர்கள்; என்று தன் மகளுக்குக் கடிதம் எழுதிய நேரு, இன்று வடநாட்டிலே இராவணனின் உருவத்தைச் செய்து 'சொக்கப் பானை' கொளுத்துகிறாரே, இது அடுக்குமா என்று கேட்கிற நாங்கள் காட்டுமிராண்டிகளா, அல்லது அவரா? நேரு சொல்லி விட்டால் நாம் அனைவரும் காட்டுமிராண்டிகள் ஆய்விட முடியுமா?

யார் ஆனாலும் சரி, காங்கிரசின் மிகப் பெரிய தலைவரான நேருவானாலும், ஆச்சாரியாரானாலும் இன்று மிக மிக மட்டரகமாகக் 'காட்டுமிராண்டிகள்', 'சில்லி', 'பைத்தியங்கள்', 'எருமை' என்று இப்படி வசைமொழி பொழிவதில் காலம் கழித்தார்களே அன்றி நாட்டு நிலைமையைப் பற்றி யோசித்தார்களா? நாட்டு மக்களிடையே காணப்படும் அவதிபற்றிக் கவலைப்பட்டார்களா?

சொந்தக் கதையை நினைத்தால்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போரை நடத்தக் கூடாதா? அப்படிச் செய்வது சட்ட விரோதமா? உலகிலே அதற்கு உதாரணம் இல்லையா?',

"1885ல், பம்பாயில், ஹ்யூம் என்ற வெள்ளையரால் ஆரம்பிக்கப்பட்டு, சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் நடைபெற்ற முதல் காங்கிரஸ் மாநாட்டில என்ன தீர்மானம் போட்டார்கள்? — 'வெள்ளையனே வெளியேறு' என்றா? கிடையாது. 'சலுகை தரவேண்டும்; ஜமீன்தார்கட்கு உதவ வேண்டும் — இந்தியர்கட்கு வேலை தரவேண்டும்,' என்று பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்கும் 'குலாம்'களாக இருந்தார்களேயன்றி, நாட்டைவிட்டு ஓடவேண்டும் என்றா சொன்னார்கள்?" இதை, நேருவே எழுதியிருக்கிறாரே!

பின்பு, ஜஸ்டிஸ் கட்சி இரண்டாகப் பிரிந்ததுபோல், கோகலே, திலகர் காலங்களிலும், பகவத்சிங் தூக்கு மேடை ஏறிய போதும், ஜெனரல் டயர் துப்பாக்கியால் சுட்டபோதும், பின்பு விடுதலைப் போராட்டத்தை காங்கிரஸ் இயக்கம் நடத்திய போதும் அப்படி யாராவது சொன்னார்களா?

பிரிட்டிஷ்காரர்கட்கு 'குலாமாக' இருந்தவர்கள், இப்போது ஏன், 'வெள்ளையனே வெளியேறு' என்று கூறுகிறார்கள் என்று யாராவது கேட்டார்களா? அல்லது நேருவும், ஆச்சாரியாரும் நினைக்கிறார்களா?

ஜஸ்டிஸ் கட்சி, வெள்ளையனுக்குத் தாசானுதாசர்கள் என்று யாரும் சொல்லத் தேவையில்லை அதுபற்றி எங்களுக்கே தெரியும். அதிலே சரியைத் தலைப்பாக்கள் உண்டென்றும் நாங்கள் அறிவோம். அதனால்தான் சேலம் செய்தோம். அதிலேயிருந்து பிரிந்து செல்ல முடியாது, பி. டி. ராசன் போன்றோர் வெளியேறவும் செய்தார்கள்.

அது எந்தக் காலம்? ஜஸ்டிஸ் கட்சி அரசோச்சிய காலம் அது. அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் என்ன சம்பந்தம்?

இந்த நாடு இப்போது எந்த நிலையில் இருக்கிறது? ஆரியம் இதை ஆட்டிப் படைக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, 'வெள்ளையனுக்கு வால் பிடித்தோர்,' என்று கூற முடியுமா?

ஓநாய் ஒன்று தனக்கு மிகவும் தூரத்தில் நின்று தண்ணீர் குடிக்கும் ஆட்டுக் குட்டியைப் பார்த்து, 'நீ ஏன் தண்ணீரைக் கலக்குகிறாய்?' என்றதாம். 'தண்ணீர் உன்பக்கமிருந்து தானே என் பக்கம் நோக்கி ஓடுகிறது; அப்படியிருக்க நான் எப்படி தண்ணீரைக் கலக்குகிறேன் என்று கூறமுடியும்?' என்று கேட்ட ஆட்டுக்குட்டியைப் பார்த்து, 'நீ கலக்காவிட்டாலும் உன் தாயார் தண்ணீரைக் கலக்கியிருக்கும்,' என்று ஓநாய் கூறியதாம்.

எப்படியாவது ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டுமென்பது தான் ஓநாயின் நோக்கம். அது போல் ஆச்சாரியார் என்னும் ஓநாய் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஆட்டுக்குட்டியைக் கொல்லப் பார்க்கிறது. வேறு என்ன இதற்கு விளக்கம் சொல்ல முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகத் அக்கார தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள் [illegible] அச்சகத்தில் அச்சிடப்பெற்று [illegible] [illegible] வெளியிடப்பெற்றது [illegible]